# காவல்துறையின் செயல்பாடுகள் சிறப்பாக உள்ளது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

கடந்த சில மாதங்களுக்கு முன்பு விழுப்புரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் நடந்த விரும்பத்தகாத நிகழ்வுகளால் சில உயிரிழப்புகள் ஏற்பட்டன. இதனையடுத்து என்னுடைய அறிவுரையின் பேரில், மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறையின் ஒருங்கிணைந்த செயல்பாடுகள் மற்றும் கடும் நடவடிக்கைகளால், தற்பொழுது கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் விற்பனை செய்தல் வெகுவாக குறைந்துள்ளது. இந்த நிலை தொடர, தொய்வின்றி கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி, கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் விற்பனையை முற்றிலுமாக அகற்றுதலை உறுதி செய்திடவேண்டும்.

இது குறித்து வாரம்தோறும் ஆய்வுக் கூட்டங்கள் நடத்திக் கண்காணிக்க வேண்டும்.

மக்களிடமிருந்து பெறப்படக்கூடிய புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் பொழுது நடுநிலைமை தவறாமல் இருத்தல் வேண்டும்.

புகார்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டு விருப்பு வெறுப்பு இல்லாமல் சட்டப்படி நடவடிக்கை எடுக்கவேண்டும். காவல் நிலையங்களில் சட்டப்படி நடவடிக்கை எடுக்காமல், அங்கேயே பேசி முடித்துக் கொள்வதை அறவே தவிர்க்கவேண்டும்.

**போதை பிரச்சினையை முழுவதுமாக தடுக்க வேண்டும்!**

போதை மருந்து நடமாட்டத்தை முற்றிலுமாகத் தடை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

போதை என்பது அதனை பயன்படுத்தும் தனிமனிதரின் பிரச்சினை அல்ல! அது சமூகப்பிரச்சினை! போதை என்பதை முற்றிலுமாக தடுக்க வேண்டும் என்று சொல்வதற்குக் காரணம், சமூகத்தில் குற்றங்களை தடுக்க வேண்டும் என்பதும் தான்.

போதைதான் கொலை, கொள்ளை, பாலியல் தொல்லை உள்ளிட்ட பல்வேறு குற்றங்களுக்கு தூண்டுதலாக இருக்கிறது. இத்தகைய குற்றங்களில் ஈடுபடுபவர்கள் பெரும்பாலும் போதை மருந்துகளை பயன்படுத்துபவர்களாக இருப்பார்கள்.

ஒவ்வொரு மாவட்ட எஸ்.பி.யும் தங்களது மாவட்டத்துக்குள் போதை விற்பனையை முற்றிலுமாகத் தடை செய்து விட்டேன் என்று மார்தட்டிச் சொல்லும் அளவுக்கு கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

> **ஒரு அரசு நல்லரசாகச் செயல்படுவதற்கு சட்டம் ஒழுங்கு முறையாக நிலைநிறுத்தப்பட வேண்டும். தமிழ்நாடு இன்று அமைதிப் பூங்காவாகத் திகழ்வதற்கு முக்கியமான காரணம், நமது அரசு சட்டம்ஒழுங்கிற்குக் கொடுத்து வரக் கூடிய முக்கியத்துவம்தான். சட்டம் ஒழுங்கை முறையாக கடைப்பிடித்து வருகிறோம் என்பதன் அடையாளம்தான் கடந்த இரண்டு ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள்.**

சாதி, மத ரீதியான மோதல்களைத் தடுப்பது ஒரு பக்கம் என்றால், சமூக இணையத் தளங்களின் மூலமாக சாதி, மதரீதியான வன்மங்களைப் பரப்புபவர்கள் அதிகமாகி வருகிறார்கள். அவர்களைக் கண்காணிக்க வேண்டும். அவர்கள்தான் சமூக அமைதியைக் கெடுக்க காரணமாக இருக்கிறார்கள்.

அவர்களால் அப்பாவிகள் பாதிக்கப்படுவார்கள். ஆனால் சொகுசாக உட்கார்ந்து கொண்டு இது போன்ற வன்மங்களை விதைப்பவர்கள் தப்பி விடுவார்கள். இப்படி நச்சுக்கருத்துகளை பரப்புபவர்களைக் கண்காணித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்நாடு காவல்துறை என்பது நடந்த குற்றங்களை கண்டுபிடிக்கும் துறையாக மட்டுமல்லாமல், குற்றங்கள் நடைபெறாமல் தடுக்கும் துறையாகச் செயல்பட வேண்டும். கடந்த ஆண்டை விட, கடந்த மாதத்தை விட, குற்றம் குறைந்திருக்கிறது என்கிற புள்ளிவிவரம் வேண்டாம். குற்றமே நடைபெறவில்லை என்ற முற்றுப்புள்ளி விவரமே தேவை என்பதை அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன்.

உள்துறைச் செயலாளர், காவல்துறை தலைமை இயக்குனர் ஆகிய இருவரும் நான் மேலே கூறிய அறிவுரைகள் அனைத்தும், விடுதல் இன்றி மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படுவதை உறுதிசெய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு மாதமும் அனைத்து காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் ஆணையர்களுக்கு இணையவழியே ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி அனைத்து அறிவுரைகளையும் முழுமையாகச் செயல்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும் என்பதே என்னுடைய எண்ணம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், சென்னை பெருநகர காவல் ஆணையர் சந்தீப்ராய் ரத்தோர், துறைச் செயலாளர்கள், காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள்!

## ‘பகுத்தறிவு, சீர்திருத்தச்செம்மல் - கலைக்குழு’வின் முதல் கூட்டம்!

### நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜூலை 12-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள் தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள “பகுத்தறிவு, சீர்திருத்தச் செம்மல் - கலைஞர்”என்ற குழுவின் முதல் கூட்டம் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அதன் விபரம் வருமாறு:-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை தேர்தலில் 13 முறை போட்டியிட்டு அனைத்து முறையும் வெற்றி பெற்றவரும், 5 முறை தமிழ்நாட்டிற்கு முதலமைச்சராக இருந்தவருமான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு அன்னாரது புகழ் நிலைத்திடும் வகையிலும் அவர் தமிழ்நாட்டு மக்களின் நலனிற்காக அறிவித்து, நிறைவேற்றிய திட்டங்களை இளைய சமுதாயத்தினர் அறிந்து கொள்ளும் வகையிலும் பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் பயன்பெறும் வகையிலும் அரசு சார்பில் நூற்றாண்டு விழா கொண்டாடிட முடிவு செய்யப்பட்டு இதற்கென பல்வேறு தலைப்புகளில் குழுக்கள் அமைத்து ஆணையிடப்பட்டது. அதில் “பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல் - கலைஞர்” என்ற குழு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. நேற்று (11.07.2023) தலைமைச் செயலகத்தில் இக்குழுவின் முதல் கூட்டம் நீர்வளத்துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்றது. இக்குழுவின் இணைத் தலைவர்களாக வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துச்சாமி, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி மற்றும் நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளரும், உறுப்பினர் செயலருமான முனைவர். சந்தீப் சக்சேனா மற்றும் இக்குழு உறுப்பினர்களான திருமதி. ஏ.எஸ்.குமரி, சுந்தர ஆவுடையப்பன், வே.மதிமாறன், வாலாசா வல்லவன், சூர்யா சேவியர், செந்தலை கவுதமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்புற நடத்துவது குறித்தும், கருத்தரங்கங்கள் நடத்துவது குறித்தும் விழா மலர் வெளியிடுவது குறித்தும் ஆலோசனை நடைபெற்றது.

---

### தென்கிழக்கு ஆசிய நாடுகளின்

## அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் கொள்முதல் பற்றிய பயிற்சி!

### மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை,ஜூலை.12-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (11.07.2023) இந்தியாவிலேயே முதன் முறையாக, தமிழ்நாட்டில், சென்னையில், WHO SEARO இயக்குநரகமும், தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகமும் இணைந்து நடத்தும், தென்கிழக்கு ஆசிய நாடுகளின் அத்தியாவசிய மருந்து பொருட்கள் கொள்முதல் முகமைகளின் பயிற்சியைத் தொடங்கி வைத்தார்.

இதில், தமிழ்நாடு அரசின் சுகாதாரத்துறை செயலாளர் தமிழ்நாடு அரசின் மருத்துவத்துறை கொள்கைகளையும், தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகத்தின் பணிகளை பற்றியும் எடுத்துரைத்தார். இப்பயிற்சி ஜூலை 11 முதல் 13 வரை சென்னையில் நடைபெற உள்ளது. பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, இந்தோனேசியா, மாலத்தீவு, நேபாளம், இலங்கை, தாய்லாந்து ஆகிய WHOSEARO உறுப்பு நாடுகள், மருந்து கொள்முதல் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது. இரண்டாம் நாள் பயிற்சியில் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகத்தினை பார்வையிட்டு பணிகள் குறித்து அறிய உள்ளனர்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, உலக சுகாதார அமைப்பின் அலுவலர்கள் டெரன்ஸ் மற்றும் கிம், தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் நிர்வாக இயக்குநர் எம். அரவிந்த், தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் ம. கோவிந்தராவ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.இரா.சாந்திமலர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு.சண்முகக்கனி மற்றும் உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



தலைமைச் செயலகத்தில், நேற்று (11.07.2023) முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடும் வகையில் அமைக்கப்பட்ட குழுக்களில் ”சமூக நீதிக் காவலர் கலைஞர் எனும் குழுவின் கூட்டம், இக்குழுவின் தலைவரும் உயர் கல்வித் துறை அமைச்சருமான முனைவர் க.பொன்முடி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இணைத் தலைவர்கள் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், உயர்கல்வித்துறை அரசு முதன்மைச் செயலாளரும், உறுப்பினர் செயலருமான ஆ.கார்த்திக், உறுப்பினர்கள் தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் மருத்துவர் டி.ஜி.வினய். முனைவர் இராமசாமி, திராவிட இயக்க எழுத்தாளர் க.திருநாவுக்கரசு, முனைவர் இரா.சுப்பிரமணி, தீபக் நாதன், திருமதி ஓவியா, முனைவர் பழ.அதியமான், கோ.கருணாநிதி, திரு.மணிகோ.பன்னீர் செல்வம், மருத்துவர் ஜி.ஆர்.ரவீந்திரநாத் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### புதுடெல்லியில் - 50வது சரக்கு மற்றும் சேவை வரி -

## ஜி.எஸ்.டி. கவுன்சில் கூட்டம்: நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பங்கேற்பு!

### தமிழ்நாடு அரசின் கருத்துகளை வலியுறுத்தினார்!

புதுடெல்லி, ஜூலை 12-

புதுடெல்லியில் நடைபெற்ற 50வது சரக்கு மற்றும் சேவை வரி (GST) கவுன்சில் கூட்டத்தில் நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டு தமிழ்நாடு அரசின் கருத்துகளை வலியுறுத்தினார்.

அதன் விபரம் வருமாறு:-

புதுடெல்லி விஞ்ஞான் பவனில் ஒன்றிய அரசின் நிதித்துறை அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் நேற்று (11.7.2023) நடைபெற்ற 50-வது சரக்கு மற்றும் சேவை வரி (GST) கவுன்சில் கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டார்.

இக்கூட்டத்தில், அமைச்சர் தங்கம் தென்னரசு, “தமிழ்நாடு அரசு ஆன்லைன் சூதாட்ட தடை மற்றும் ஆன்லைன் விளையாட்டுகளை முறைப்படுத்தும் சட்டம் இயற்றியுள்ளது. எனவே, சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் கீழ் ஆன்லைன் விளையாட்டுகளுக்கு வரிவிதிப்பதற்கான பரிந்துரைகள், தமிழ்நாடு அரசு இயற்றிய ஆன்லைன் சூதாட்ட தடைச் சட்டத்திற்கு முரணாக இந்தப் பரிந்துரைகள் இருக்கக் கூடாது” என்று வலியுறுத்தினார்.

மேலும், “சரக்குகள் மற்றும் சேவைகள் இணையத்தை, பண மோசடி தடுப்புச் சட்டம், 2002 இன் கீழ் சேர்த்து ஒன்றிய அரசால் வெளியிடப்பட்டுள்ள 7 ஜூலை 2023 நாளிட்ட அறிவிக்கை வணிகர்களின் நலனுக்கு எதிராகவும், சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் கீழ் சட்ட மீறல்களை கிரிமினல் குற்றமற்றதாக மாற்றும் அடிப்படை நோக்கத்திற்கு எதிரானதாகவும் உள்ளதால், நாடெங்கும் உள்ள வணிகர்களுக்கு, குறிப்பாக சிறு வணிகர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு இதை எதிர்க்கிறது” என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து, “அரசியலமைப்புச் சட்டத்தின் 11-ஆவது மற்றும் 12-ஆவது அட்டவணையில் உள்ள, பஞ்சாயத்து மற்றும் நகராட்சி அமைப்புகளின் செய்கடமைகள் தொடர்பான சேவைகள் மற்றும் 25 விழுக்காடுக்கு பொருட்கள் மிகாத கூட்டு வழங்குகை சேவைகளை, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் ஒன்றிய / மாநில அரசுகள் பெறும்போது தற்போது சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் கீழ் வரிவிலக்கு உள்ளது. இதனை குறிப்பிட்ட சில வரிவிலக்கு இனங்கள் என வரையறுத்து மாற்றியமைக்க உத்தேசித்துள்ள திருத்தத்தால் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் மாநில அரசுக்கு கூடுதல் நிதிச்சுமை ஏற்படும் என்பதால் தமிழ்நாடு அரசு தொடர்ந்து இதை எதிர்த்து வருகிறது எனவே அதனை முற்றிலுமாக கைவிட வேண்டும் என அமைச்சர் வலியுறுத்தினார்.

மேலும், சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட வேண்டிய மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் மாநில அமர்வுகளுக்கு நியமிக்க வேண்டிய நீதித்துறை மற்றும் தொழில்நுட்ப உறுப்பினர்களைத் தெரிவு செய்ய மாநில அளவிலான தெரிவு செய்யும் குழுவுக்கு அதிகாரமளிக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது என்றும் இக்கூட்டத்தில் குறிப்பிட்டார்.

இதனையடுத்து, கேன்சர் நோய்க்கான விலை உயர்ந்த மருந்தினை தனிநபர் பயன்பாட்டிற்கு இறக்குமதி செய்யும் போது செலுத்த வேண்டிய ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரியினால் ஏற்படும் கூடுதல் செலவினத்தைக் குறைப்பதற்கு வரிவிலக்களிக்கும் பரிந்துரைக்கு தமிழ்நாடு அரசு தனது ஆதரவு தெரிவிக்கிறது என்றும்;

குறிப்பிட்ட அரிய வகை நோய்களைக் குணப்படுத்தப் பயன்படுத்தப்படும் மருந்துகள் மற்றும் உணவுகளை தனிநபர் பயன்பாட்டிற்கு இறக்குமதி செய்யும் போது செலுத்த வேண்டிய ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்கு விலக்களிக்கும் பரிந்துரைக்கும் தமிழ்நாடு அரசு தனது ஆதரவைத் தெரிவிப்பதாக இக்கூட்டத்தில் அமைச்சர் தங்கம் தென்னரசு குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் நிதித்துறை முதன்மைச் செயலாளர்

த. உதயச்சந்திரன், வணிகவரித் துறை ஆணையர் தீரஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

### தமிழகம் முழுவதும் இன்று முதல்

## 300 ரேஷன் கடைகளில் தக்காளி விற்பனை..!

சென்னை, ஜூலை 12-

தமிழகம் முழுவதும் இன்று முதல் 300 ரேஷன் கடைகளில் தக்காளி விற்பனை செய்யப்படுகிறது. தமிழகத்தில் தக்காளி விலை தொடர்ந்து உச்சத்தில் இருந்து வருகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு சற்று குறைந்த நிலையில் மீண்டும் அதிகரித்தது. வெளி மாநிலங்களில் இருந்து தக்காளி வரத்து சென்னைக்கு குறைவாகவே வருவதால் விலையேற்றத்துடன் காணப்படுகிறது.

கோயம்பேடு மார்க்கெட்டில் மொத்த விற்பனைக்கே தக்காளி கிலோ ரூ.100க்கு நேற்று விற்கப்பட்டது. இதனால் காய்கறி கடைகளில் சில்லரை விற்பனை ரூ.130 முதல் ரூ.150 வரை விற்கப்படுகிறது.

இதனையடுத்து முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலின்படி தமிழகம் முழுவதும் 300 ரேஷன் கடைகளில் குறைந்த விலையில் தக்காளி இன்று முதல் விற்கப்படுகிறது.



நேற்று (11.07.2023) சென்னை, சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் தலைமை அலுவலகத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடும் வகையில் அமைக்கப்பட்ட “நிறுவனங்களின் நாயகர் – கலைஞர்” – குழுவின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், இணைத் தலைவர்கள் சட்டத்துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், உறுப்பினர் செயலர் – நகராட்சி நிர்வாகத் துறை இயக்குநர் பா.பொன்னையா, குழு உறுப்பினர்கள் ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ.மதிவாணன், மருத்துவர் சந்திரகுமார், மருத்துவர் மோகன் காமேஸ்வரன், கிருஷ்ணராஜ் வானவராயர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.